**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-05032021-3644

Volume: 5

Issue: 3

Month: January

Year: 2021

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 16.10.2020

Accepted: 10.11.2020

Published: 01.01.2021

Citation:
Chandiran, A. "The Meaning of the Word Masculinity in Sangam Literature." *Shanlax International Journal of Tamil Research,* vol. 5, no. 3, 2021, pp. 72–79.

DOI:
https://doi.org/10.34293/tamil.v5i3.3644

*Corresponding Author:
chandiranacn@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# The Meaning of the Word Masculinity in Sangam Literature

**Dr. A. Chandiran**
*Assistant professor, Department of Tamil Master and Research*
*Sacred heart college (Autonomous), Tirupattur D istrict*
https://orcid.org/0000-0003-0652-3251

**Abstract** - During the Sangam period the terms aanthakai, aanmai, aan, magan (masculine) are used to refer to a man's against a woman. However, the meaning of those words is in stark contrast to what could have been said to refer to a woman's morals in the sense of chastity / femininity. That is, on the level of morality, chastity / femininity x anthakai, aanmai, aan, magan (masculinity), female x masculine are located in opposition. This article explores how these words are used to describe the moral character of men in Sangam songs.

**Key Words:** Sangam Literature, masculinity, valor strength, Relationship between Male and female, Individual morality

**References**

1. Alice, Dr. A. (Ed.) (2004). (Third Ax 2007), *Response*, Chennai, New Century Book House (P) Ltd.,
2. Subramanian, Dr. P. (Ed.), (2004). (first edition), *Paripadal*, Chennai, New Century Book House (P) Ltd.,
3. Seyapal, Dr. Ira. (Ed.), (2004). (Third Print 2007), *Akananuru* (Volume 1, 2), Chennai, New Century Book House (P) Ltd.
4. Datsinamoorthy, Dr. A. (Ed.), (2004). (Third Print 2007), *Five Hundred,* Chennai, New Century Book House (P) Ltd.,
5. Nagarajan, Dr. V. (Ed.) (2004). (Third Print 2007), *Shorthand* (Volume 1, 2), Chennai, New Century Book House (P) Ltd.,
6. Nagarajan, Dr. V. (Ed.) (2004). (First Edition), *Decimal* (Part-2), Chennai, New Century Book House (P) Ltd.,
7. Balasubramanian, Dr. K.V. (Ed.), (2004). (First Edition), *Nursery*, New Century Book House (P) Ltd, .
8. Balasubramanian, Dr. K.V. (Ed.), (2004). (Third Print 2007), *Purananuru* (Vol. 1, 2), Chennai, New Century Book House (P) Ltd.,
9. Mohan, Dr. Ira. (Ed.) (2004). (Third Ax 2007), *Decimal* (Part-1), Chennai, New Century Book House (P) Ltd.,
10. Viswanathan, Dr. A. (Ed.), (2004). (Third Print 2007), *Tuition*, Chennai, New Century Book House (P) Ltd.,
11. Thomas Lehmann and Thomas Malten. (2007). (second edition) *A word index for cankam literature*, Institute of Asian Studies, Chennai, chemmancherry.

# சங்க இலக்கியத்தில் ஆண்மை என்ற சொல்லின் பொருள்

***முனைவர் ஆ. சந்திரன்***
உதவிப் பேராசிரியர், தமிழ் முதுகலை மற்றும் ஆய்வுத்துறை
தூயநெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி), திருப்பத்தூர்

***ஆய்வுச் சுருக்கம்:*** *சங்க காலத்தில் பெண்ணுக்கு எதிரான பாலினமான ஆணின் ஒழுக்கப்பண்பைப் பற்றிக் குறிப்பதற்காக ஆண்தகை, ஆண்மை, ஆண், மகன் என்ற சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. என்றாலும், அந்தச் சொற்களின் பொருள் என்பது கற்பு / பெண்மை என்ற பொருளில் பெண்ணின் ஒழுக்கத்தைப் பற்றிக் குறிப்பதற்காகச் சொல்லப்பட்டிருக்கக்கூடிய பொருளுக்கு முற்றிலும் நேரெதிராக அமைகிறது. அதாவது, ஒழுக்கப்பண்பு என்ற அளவில் கற்பு / பெண்மை து ஆண்தகை, ஆண்மை, ஆண், மகன் என்று (பெண் x ஆண்) எதிர்வுகளாக அமைந்துள்ளன. சங்க இலக்கிய பாடல்களில் ஆணின் ஒழுக்கப் பண்பைக் குறித்த இந்த சொற்கள் எவ்வாறெல்லாம் பொருள் கொள்ளப்பட்டுள்ளன என்பதைக் குறித்து ஆராய்கிறது இந்தக் கட்டுரை.*

***முக்கியச் சொற்கள்:*** *சங்க இலக்கியம், சங்ககாலம், ஆண்மைக்கான பொருள், வீரம் வலிமை, ஆணுக்கும் பெண்ணுக்கும் உள்ள உறவு, தனிமனித ஒழுக்கப்பண்பு*

## முன்னுரை

கற்பு / பெண்மை என்ற சொற்கள் பெண்களின் ஒழுக்கப் பண்பைக் குறிக்க சங்ககாலத்தில் பயன்படுத்தப்பட்டவை. அதுபோல ஆண்களின் ஒழுக்கப் பண்பைக் குறிக்க ஆண்தகை, ஆண்மை, மகன், அண்ணல் என்ற சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அவை, தலைவனை அல்லது வீரனை குறிப்பதற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதாவது பெண்ணுக்கு எதிரான பாலினம் ஆண். அந்த ஆணின் ஒழுக்கப்பண்பைப் பற்றிக் குறிப்பதற்காக மேற்கண்ட சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அந்தச் சொற்களின் பொருள் என்பது கற்பு / பெண்மை என்ற பொருளில் பெண்ணைக் குறிப்பதற்காக அல்லது பெண்ணின் ஒழுக்கத்தைப் பற்றிக் குறிப்பதற்காகச் சொல்லப்பட்டு இருக்கக்கூடிய பொருளுக்கு முற்றிலும் நேரெதிராக அமைகிறது.

தலைவனின் வருகைக்காக காத்திருக்க வேண்டும். “கற்பு மேம்படுவி” *(அகம். 323: - 7)*, கற்புடன் கணவனுடன் வாழவேண்டும் “கற்பினின் வழாஅ நற்பல உதவி” *(அகம்.86 : 13)*, நாணத்துடன் தலைவனுக்காக காத்துக் கொண்டிருக்க வேண்டும் “நாணொடு மிடைந்த கற்பின்” *(அகம்.9:24)*, வினைமேல் செல்வது தலைவனின் கடன் அதுபோல வீட்டில் அவனுக்காக காத்திருப்பது தலைவியின் கடன் “மனை மாண் கற்பின் வாணுதல் ஒழிய” *(அகம்.33: 2)* என்பன போன்றன அல்ல அது. மாறாக வீரம், சொன்ன காக்கும் பண்பு, விடாப்பிடியான கொள்கைப் பிடிப்பு முதலான பொருண்மையில் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதாவது, ஒழுக்கப்பண்பு என்ற அளவில் கற்பு / பெண்மை x ஆண்தகை, ஆண்மை, ஆண், மகன் என்று (பெண் / ஆண்) எதிர்வுகளாக அமைந்துள்ளன. அவற்றில் முதலாவதாக ஆண்மை என்ற சொல் குறித்துக் காண்போம்.

## அண்தகை (ஆண்டகை) என்ற சொல்

ஆண்மகனின் ஒழுக்கத்தைப் பற்றிக் குறிக்க அண்தகை (ஆண்டகை) என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. அது இரு இடங்களில் நேர்மறையான பொருளிலும், ஓர் இடத்தில்

எதிர்மறை பொருளிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. அதில்,

**"அசை நுகம் படாஅ ஆண்தகை உள்ளத்து"**
***(புறம்.179:9)***

**"ஆண்டும் நிற்கும் ஆண்தகை யன்னே"**
***(புறம்.292:8)***

என்ற சொற்களின் அர்த்தம் முறையே

**"ஆண்மை பொருந்திய ஊக்கம்**
**ஆண்மையுடன் கூடிய போர் முயற்சி"**

என உள்ளது. அதேவேளை இவற்றிற்கு மாறாக

**"ஆண்டகை விறல் வேள் அல்லன்.."**
***(ஐங். 250:4)***

என்ற பாடலில் "வீரமற்ற கோழை" என்பதைக் குறிப்பதற்காக அதாவது, ஆண்மை அற்றவன் / வீரமிக்கவன் அல்லன் என்ற பொருள்படும்படி எதிர்மறையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

ஓர் ஆண் மகனுடைய வீரனுடைய ஒழுக்க பண்பைக் குறிப்பதற்காக இந்தச் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளதை அறிந்து கொள்ள முடிகிறது.

## ஆண்மை என்ற சொல்

ஆண்மகனின் ஒழுக்கத்தைப் பற்றிக் குறிக்க ஆண்தகை என்ற சொல்லைப் போல ஆண்மை என்ற சொல்லும் பயன்படுத்தப்பட்டுள்ளது. அது சங்கப்பாடல்களில் 17 இடங்களில் குறிப்பிடப் பட்டுள்ளது. அது,

**"ஞாயிற்று அன்ன வெந்திறல் ஆண்மையும்"**
***(புறம்.55:13)***

**"எறிபடைக்கு ஓடா ஆண்மை அறுவைத்......"**
***(புறம்.154:10)***

**"ஆண்மை தோன்ற ஆடவர்க் கடந்த"**
***(புறம்.242: 4)***

**"பகைவர் புகழ்ந்த ஆண்மை ..."**
***(புறம்.373:35)***

**"வாண் மீசைக் கிடந்த ஆண்மையோன் திறத்தே"**
***(புறம்.270:13)***

**"ஆயிடை இரு பேர் ஆண்மை செய்த பூசல்"**
***(குறுந். 43:3)***

**"கண்ணிய ஆண்மை கடவது அன்று என"**
***(குறுந்.341:5)***

**"படியோர்த் தேய்த்த பணிவு இல் ஆண்மை"**
***(மலை.423)***

**"அறிந்தோர் புகழ்ந்த ஆண்மையர்"**
***(மது.645)***

**"துப்புத் துறைபோகிய துணிவுடை ஆண்மை"**
***(பதி.14:6)***

**"பகுத்தூண் தொகுத்த ஆண்மை"**
***(பதி.38:15)***

**"வணங்கிய சாயல் வணங்கா ஆண்மை"**
***(பதி.48:9)***

**"பொருது சினம் தணிந்த செருப்புகல் ஆண்மை"**
***(பதி.55:19)***

**"வணங்கிய சாயல் வணங்கா ஆண்மை"**
***(பதி.70:20)***

**"வளனும் ஆண்மையும் கைவண் மையும்"**
***(பதி.73:14)***

**"படியோர்த் தேய்த்த ஆண்மை."**
***(பதி.79:6)***

**"விழுமத்தின் புகலும் பெயரா ஆண்மை"**
***(பதி.90:38)***

என அமைந்துள்ளது. அந்த சொற்களின் அர்த்தம் முறையே

1. ஞாயிறு போன்ற ஆற்றல்
2. புறமுதுகிடாத வீரம்
3. பகைவர் பாராட்டும் வீரம்
4. பகைவரை ஆளும் தன்மை
5. எவருக்கும் பணியாத தன்மை
6. அஞ்சாமை வீரம் என்ற பொருட்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

மேலும்,

**"குடிபுறவு இரக்கும் கூர் இல் ஆண்மை"**
***(புறம்.75:4)***

என்ற பாடல் வரி முருகனை ஒத்த வீரன் அல்லன் என்று பொருள் தருகிறது. அதாவது, வீரன் அல்ல என்று எதிர்மறையான பொருளை இது குறிப்பதாக உள்ளது. என்றாலும் இதில் இடம்பெற்றுள்ள ஆண்மை என்ற சொல்லின்

பொருள் வீரம் என்பதாக உள்ளது குறிப்பிடத்தக்கது.

ஆக ஆண்தகை என்ற சொல்லைப் போல ஆண்மை என்ற சொல்லும் ஆண் மகனுடைய வீரன் உள்ளிட்ட அவனுடைய ஒழுக்க பண்பைக் குறிப்பதற்காக பயன்படுத்தப்பட்டுள்ளதை அறிந்து கொள்ள முடிகிறது.

**ஆண் என்ற சொல்**

மனித இனத்தில் ஒரு பிரிவான ஆடவரைக் குறிக்கும் ஆண் என்ற சொல் வீரன் என்ற சொருளைக் குறிப்பதாக எழு இடங்களில் குறிக்கப்பட்டுள்ளது.

***"வில் இலைத்து உண்ணும் வல் ஆண் வாழ்க்கை" (அகம்.31:13)***
***"வல் ஆண்" (அகம்.35:7, 107:12)***
***"ஆண் அணி புகுதலும் .." (சிறு.211)***
***"ஆண் கடன் நிறுத்த" (பதி.31:14)***
***"ஆண் மலி யூப மொடு" (பதி.67:10)***
***"கல்வியென் என்னும் வல் ஆண் சிறாஆன்" (புறம்.346:3)***
***"ஆண் தலை அணங்கு" (மது.29)***

என இடம்பெற்றுள்ள மேற்கண்ட இவை தலைவன், ஆண்மகன், வீரமிக்கவன், போர்வீரன் என்ற பொருள்களைக் கொண்டுள்ளன.

அத்துடன்,

ஆண் என்ற சொல் ஆண்மான் பெண்மானை அழைப்பதற்காக குரல் எழுப்பும் இடத்தில் "வலிமையான" என்ற பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறாக,

***"அறுகோட்டு உழை மான் ஆண் குரல் ஓர்க்கும்"***
***(அகம்.147:7)***

***"கலையே***
***"கதிர் மாய் மாலை ஆண் குரல் விளிக்கும்"***
***(அகம்.199:11,12)***
***"ஆண்குரல் விளிக்கும் சேண்பால் வியன்"***
***(அகம்.321:6)***
***"அலந்தலை மூதேறு ஆண்குரல் விளிப்ப"***
***(அகம். 367:3)***

என நான்கு பாடல்களில் கூறப்பட்டுள்ளது.

**அண்ணல் என்ற சொல்**

அண்ணல் என்ற சொல் ஆண்மகன், தலைமை அல்லது தலைவன் என்ற பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளது. அது,

***"மாண் எழில் அண்ணல்"***
***(கலி.9:10)***
***"ஆர மார்பினை அண்ணலை.."***
***(கலி.52:15)***
***"ஆண் எழில் அண்ணலோடு .."***
***( கலி.139:21)***
***"அண்ணல் நெடுங்கோட்டு ."***
***(குறி.54)***
***"பலர் குறை செய்த மலர் தார் அண்ணற்கு"***
***(புறம். 311: 4)***
***"நெடுந்தோள் அண்ணல் .." (ஐங்.198:4)***
***"அண்ணல் உள்ளமொடு ." (நற்றி.372:7)***
***"... கொடித்தேர் அண்ணல்"***
***( பதி.33:1, மற்றும் 55:9)***
***"திண் தேர் அண்ணல் ." (புறம். 198:6)***
***"வெள் வேல் அண்ணல் .........."***
***(பதி.51:23)***
***"வென்வேல் அண்ணல் ..............."***
***(புறம்.141:7)***
***"கழல் தொடி அண்ணல்" (பதி.64:15)***
***"வெல்போர் அண்ணல்"***
***(பதி.70:22 மற்றும் 81:18)***
***"ஆடு நடை அண்ணல்" (பதி.86:8)***
***"செயிர் தீர் அண்ணல்" (பரி.1:30)***
***"அடுபோர் அண்ணல்"***
***(புறம்.42:1, 67:2, 129:5, மற்றும் மது. 207)***
***"அண்ணல் எம் கோமான் ...................."***
***(புறம். 95: 9)***
***"விறல் போர் அண்ணல்" (புறம். 201:12)***
***"இயல் தேர் அண்ணல்"***
***(புறம்.202:13 மற்றும் 203:6)***
***"அகல் நாட்டு அண்ணல்"***
***(புறம்.249:7)***
***".. வெல் போர் அண்ணல்" ( புறம்.353:6)***

"மலர் தார் அண்ணல் ..................."

(புறம்.393:9)

என 28 இடங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது. இவற்றுடன் சிவ பெருமானையும், திருமாலையும், சோழமன்னனையும், நன்னன் என்ற மன்னனையும் "அண்ணல்" என்ற சொல்லால் சங்கப்பாடல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. அது,

"மணி மிடற்று அண்ணற்கு ..........."

(பரி.9:7)

"கறை மிடற்று அண்ணற்கு" (புறம்.55:4)

"மறு மிடற்று அண்ணற்கு ................."

(பரி.8:127)

"செரு மேம்பட்ட செயிர் தீர் அண்ணல்"

(பரி.1:30)

"திருந்து வேல் அண்ணற்கு .........."

(மலை.319)

"சோணாட்டு அண்ணல்" (புறம். 337:1)

என ஆறு இடங்களில் இடம்பெற்றுள்ளது. இவ்வாறு உயர்திணைக்குரிய ஆண்பாலில் இடம்பெற்றுள்ள தலைவன், மன்னன், கடவுள் போன்றவர்களுடன் "தலைமை" என்ற பொருளில் குறிக்கப்படும் இந்த "அண்ணல்" என்ற சொல் அதே பொருளில் அஃறிணையான யானை, மான், ஏறு, களிறு, மேகம் போன்றவற்றுக்கும் உயர்வான என்ற பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

"அண்ணல் இரலை ................."

(அகம் 23:8, 34:4 மற்றும் 304:9)

"அண்ணல் யானை"

(அகம்.61:9, 96:13, 115:13, 208:4, 251:15, 373:16. ஐங்.466:2. குறி.171), குறு.260:5 மற்றும் 343:2. சிறு.200. நற்றி.194:5 மற்றும் 273:6. பதி.42:8. புறம்.93:13, 115:5, 126:20, 130:5, 287:5, 326:14, 388:15 மற்றும் 390:28. மது.348)

"அண்ணல் ஏஎறு"

(அகம். 64:11, 146:1 மற்றும் 238:7)

"அண்ணல் நல்ஏறு"

(குறு.338:1 மற்றும் 363:1. புறம். 288: 2)

"அண்ணல் நெடுவரை"

(அகம். 75:9. குறு.392:3. நற்றி.236:8. புறம்.116:15 மற்றும் 158:2)

"அண்ணல் ஏற்றொடு" (குறு.344:3)

"அண்ணல் மழ களிறு" (பதி.12:12)

"அண்ணல் அம் பெருங்கோட்டு"

(பதி. 22:26)

"அண்ணல் மரையா அமர்ந்து இனிது உறையும்" (பதி.23:14)

"அண்ணல் அம் கொண்மூ"

(புறம். 205:11)

என 42 இடங்களில் அது அமைந்துள்ளது.

ஆண்தகை, ஆண்மை, ஆண் என்ற சொற்கள் வலிமையான, வீரமிக்க, தலைமை குணம்கொண்ட என்ற பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளதைப் போல் மகன் என்ற சொல்லும் ஆணுடன் தொடர்புடையதாக உள்ளது.

**மகன் என்ற சொல்**

மகன் என்ற சொல் ஆண்மகனுடன் தொடர்புடையதாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது என்றாலும் அது,

1. ஆண்மகன், தலைவன், வீரன் என்ற பொருண்மையில் கூறுவது
2. தெய்வத்தன்மையோடு இணைத்து கூறுவது
3. தலைவனுடைய ஒழுக்கத்தைக் கேள்விக்கு உட்படுத்துவது
4. மன்னன் அல்லது பிற நபர்களை நேரடியாக குறிப்பது

என்ற நான்குவகையில் அமைந்துள்ளது. அதன் விவரம் வருமாறு;

**மகன் - 1**

மகன் என்ற சொல் ஆண்மகன், தலைவன், வீரன் என்ற பொருண்மையில் கூறுவதாக

"... மற்று இவன்

"மகனே.." (அகம்.48:24- 25)

"மாஅல் மகனே" (கலி.21:9)

*:.. நகைக்கூட்டடம்*
*செய்தான் அக்கள்வன் மகன்"*
*(கலி.51:15,16)*
*"ஆண்டலைக்கு ஈன்ற பறழ் மகனே"*
*(கலி.94:6)*
*"கோட்டினத்து ஆயர் மகன்"*
*(கலி.103:33)*
*"கோவினத்து ஆயர் மகன்.."*
*(கலி.103:37)*
*"புல்லினத்து ஆயர் மகன்" (கலி.103:47)*
*"ஆயர் மகன்" (கலி.104:72)*
*"ஆயர் மகன்.." (கலி.107:19)*
*"புல்லினத்து ஆயர் மகன் ............."*
*(கலி.115:4)*
*"நன்றோ மகனே யென்றனென்"*
*(குறு.389:4)*
*"கடுந்தேர்ச் செல்வன் காதல் மகனே"*
*(நற்.45:5)*
*"பாழ் காத்திருந்த தனி மகன் போன்ற"*
*(நற்.153:10)*
*"இவை மகன் என்னா அளவை"*
*(நற்.267:11)*
*"தனி மகன் வழங்கா பனிமலர்க் காவின்"*
*(புறம்.33:19)*

என *15* இடங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது. தலைவன், ஆண்மகன், தகுந்தவன் என்ற உயர்வான பொருளில் *(காதல் மேலிட)* ஆணைக் குறிப்பதற்காக இந்தச் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது.

**மகன் – 2**

மகன் என்ற சொல் முருகன், தேவர்மகன் எனத் தெய்வத்தன்மையோடு இணைத்து கூறுவதாக

*"ஆல் அமர் செல்வன் அணி சால் மகன்"*
*(கலி.83:14)*
*"ஞாயிற்றுப் புத்தேள் மகன்"*
*(கலி.108:13)*
*"மலைமகள் மகனே..." (திரு.257)*

என மூன்று பாடல்களில் கூறப்பட்டுள்ளது.

**மகன் – 3**

மகன் என்ற சொல் தலைவனுடைய ஒழுக்கத்தைக் கேள்விக்கு உட்படுத்துவதாக எதிர்மறையான பொருளில்

*"மகன் அல்லை.." (கலி.19:6)*
*"மகன் அல்லான் பெற்ற மகன் ..."*
*(கலி.84:13)*
*"புன்னை அரும்பிய புலவு நீர்ச் சேர்ப்பன்*
*என்ன மகன் கொல் தோழி" (நற்.94:6,7)*
*"வண்டு என மொழிப மகன் என்னாரே"*
*(நற்.290:9)*

என நான்கு பாடல்களில் கூறப்பட்டுள்ளது. அதாவது, அது

*"நல்ல பண்புகளைக் கொண்ட ஆண்மகன்*
*அல்ல என்ற பொருளில்*
*"ஒழுக்கமற்றவன்/ பரத்தையர்வழி பிரிந்த*
*தலைவனைக் குறிப்பதற்காக*
*"என்ன ஆண்மகன் இவன்*
*(ஆண்மகன் இல்லை)*

எனத் தலைவனுடைய ஒழுக்கமற்றச் செயலைக் குறிப்பதற்காக எதிர்மறையான நிலையில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

**மகன் – 4**

மகன் என்ற சொல் மன்னன் அல்லது பிற நபர்களை நேரடியாகக் குறிப்பதாக

*"சோழர் பெருமகன்" (அகம்.375:10)*
*"...................... பூழியர் பெருமகன்"*
*(புறம்.387:28)*
*"சிற்றில் நல் தூண் பற்றி நின்மகன்*
*யாண்டு உளன் ....................."*
*(புறம்.86:1,2)*
*"புள் ஆர் யாணர்த்தற்றே என் மகன்*
*வளவனும் செம்மலும் எமக்கு ....."*
*(புறம்.254:8)*
*"படு மகன் கிடக்கை காணுஉ .."*
*(புறம்.278:8)*
*"ஒருமகன் அல்லது" (புறம் .279:10)*
*"முன் நாள் வீழ்ந்த உறவோன் மகனே"*
*(புறம்.310:5)*

**"அதனால் அறவோன் மகனே மறவோர் செம்மல்" (புறம்.366:6)**

**"கரும்பன் ஊரன் காதல் மகனே" (புறம்.381:26)**

**"மரம்கோல் உமண் மகன் பேரும் பருதி" (அகம்.343:3)**

**"பாண் மகனும்மே" (புறம்.11:15)**

**"பார்ப்பன மகனே பார்ப்பன மகனே" (குறு.156:1)**

என 12 இடங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது. மேலும் அச்சொல் அரசன், வீரன், வீரனின் மகன் போர்க்களத்தில் இருக்கக்கூடிய தாயின் வீரமகன் என்ற முறையில் மன்னனோடு குறிப்பாக, வீரம் என்ற ஒன்றோடு நேரடியாகத் தொடர்புபடுத்துவதாக அமைந்துள்ளது.

இவற்றில் கடைசி மூன்று பாடல்களில் (அகம்.343:3, புறம்.11:15, குறு.156:1) மட்டும் பார்ப்பனன், வணிகன் என்ற இரண்டு நபர்களை பற்றியதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

புறநானூறு 11 ஆம் பாடலில் குறிக்கப்பெறும் பாண்மகன் என்பது அரசனிடமிருந்து பாடிப் பரிசில் பெற்ற பாணன் என்ற சூழல் பின்புலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. குறுந்தொகை 156 ஆம் பாடலில் இடம்பெற்றுள்ள பார்ப்பன மகனே என்ற சொல்லும் தலைவனை அடைவதற்குரிய உபாயத்தைக் கூறுமுகமாக அவனுடைய உயர்வு நோக்கியதாகவே அமைந்துள்ளது. குறுந்தொகை 156 ஆம் பாடலில் பார்பனன் என்பது அகத்தில் தலைவனுக்கு நண்பனாக இருப்பவனைப் பற்றியதாக உள்ளது. (கவனிக்க. அவசியம் இல்லை எனபதால் குழந்தை என்ற பொருளில் வரும் மகன் என்ற சொல் குறித்து இங்கு விவாதிக்கப்படவில்லை.)

தலைவன் என்ற பொருளில் இல்லாமல் இடம்பெற்றுள்ள இடங்களிலும் கூட மேன்மையான செயல்பாடுகளை செய்யக் கூடிய நபர் என்ற பொருளிலேயே இந்தச் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது.

## முடிவுரை

பெண்ணுக்கு எதிரான பாலினமான ஆணின் ஒழுக்கப்பண்பைப் பற்றிக் குறிப்பதற்காக ஆண்தகை, ஆண்மை, ஆண், மகன் என்ற சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அந்தச் சொற்களின் பொருள் என்பது கற்பு/ பெண்மை என்ற பொருளில் பெண்ணின் ஒழுக்கத்தைப் பற்றிக் குறிப்பதற்காகச் சொல்லப்பட்டிருக்கக்கூடிய பொருளுக்கு முற்றிலும் நேரெதிராக அமைகிறது. அதாவது, ஒழுக்கப்பண்பு என்ற அளவில் கற்பு / பெண்மை /ஆண்தகை, ஆண்மை, ஆண், மகன் என்று (பெண் / ஆண்) எதிர்வுகளாக அமைந்துள்ளன.

ஆண்மகனின் ஒழுக்கத்தைப் பற்றிக் குறிக்க அண்தகை என்ற சொல் மூன்று இடங்களிலும், ஆண்மை என்ற சொல் 17 இடங்களிலும், ஆண் என்ற சொல் 8 இடங்களிலும், அண்ணல் என்ற சொல் 28 இடங்களிலும் பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்த இடங்களிலெல்லாம் அச்சொற்கள் தலைவன், ஆண்மகன், வீரமிக்கவன், போர்வீரன் என்ற பொருள்களைக் கொண்டுள்ளன.

ஆண் என்ற சொல் ஆண்மான் பெண்மானை அழைப்பதற்காக குரல் எழுப்பும் இடத்தில் "வலிமையான" என்ற பொருளில் நான்கு இடங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

சிவபெருமானையும், திருமாலையும், சோழ மன்னனையும், நன்னன் என்ற மன்னனையும் "அண்ணல்" என்ற சொல்லால் ஆறு இடங்களில் குறிப்பிடப் பட்டுள்ளது.

"அண்ணல்" என்ற சொல் தலைமை / உயர்வு என்ற பொருளில் அஃறிணையான யானை, மான், ஏறு, களிறு, மேகம் போன்றவற்றுக்கும் 42 இடங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

மகன் என்ற சொல் ஆண்மகன், தலைவன், வீரன் என்ற பொருளில் 15 இடங்களிலும்,

தெய்வத்தன்மையோடு இணைத்து கூறுவதாக 3 இடங்களிலும், தலைவனுடைய ஒழுக்கத்தைக் கேள்விக்கு உட்படுத்துவதாக 4 இடங்களிலும், மன்னன் அல்லது பிற நபர்களை நேரடியாக குறிப்பதாக 12 இடங்களிலும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறாக ஆண்தகை, ஆண்மை, ஆண், மகன் என்ற சொற்கள் வலிமையான, வீரமிக்க, தலைமை, தெய்வத்தன்மை கொண்ட என்ற உயரிய பொருளில் ஆண் பாலினத்தைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆணின் ஒழுக்கப் பண்பாகக் குறிக்கப்படும் அச்சொற்கள் தனிமனித ஒழுக்கப்பண்பு என்ற அளவில் கற்பு / பெண்மை / ஆண்தகை, ஆண்மை, ஆண், மகன் என்று பெண் / ஆண் எதிர்வுகளாக அமைந்துள்ளன.

**துணை நின்றவை**

1. ஆலிஸ், அ., (உ.ஆ.) (2004). (மூன்றாம் அச்சு 2007), *பதிற்றுப்பத்து*, சென்னை, நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்,.
2. சுப்பிரமணியன், பெ. (2004). (உ.ஆ), (முதல் பதிப்பு), *பரிபாடல்*, சென்னை, நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,
3. செயபால், இரா. (உ.ஆ), (2004). (மூன்றாம் அச்சு 2007), *அகநானூறு* (தொகுதி1, 2), சென்னை, நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் (பி)லிட்,
4. தட்சிணாமூர்த்தி, அ. (உ.ஆ), 2004. (மூன்றாம் அச்சு 2007), *ஐங்குறுநூறு*, சென்னை, நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் (பி)லிட்.,
5. நாகராாசன், வி. (உ.ஆ) (2004). (மூன்றாம் அச்சு 2007), *குறுந்தொகை* (தொகுதி1, 2), சென்னை, நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் (பி)லிட்.,
6. நாகராசன், வி. (உ.ஆ.) (2004). (முதல் பதிப்பு), *பத்துப்பாட்டு* (பகுதி -2), சென்னை, நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,
7. பாலசுப்பிரமணியன், கு.வெ. (உ.ஆ), 2004. (முதல் பதிப்பு), *நற்றிணை*, சென்னை , நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் (பி)லிட்.,
8. பாலசுப்பிரமணியன், கு.வெ., (உ.ஆ.கு), 2004. (மூன்றாம் அச்சு 2007), *புறநானூறு* (தொகுதி -1, 2), சென்னை, நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,
9. மோகன், இரா. (உ.ஆ.) 2004. (மூன்றாம் ஆச்சு 2007), *பத்துப்பாட்டு* (பகுதி -1), சென்னை, நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,
10. விசுவநாதன், அ. (உ.ஆ), 2004. (மூன்றாம் அச்சு 2007), *கலித்தொகை*, சென்னை. நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் (பி)லிட்,
11. தாமஸ் லெஹ்மன் மற்றும் தாமஸ் மால்டன், 2007. (இரண்டாவது பதிப்பு), சங்க இலக்கிய சொல்லடைவு (A word index), ஆசிவியல் ஆய்வுகள் நிறுவனம், சென்னை, செம்மஞ்சேரி, .